# ஸ்ரீ ஆண்டாள் சிறப்பு

சொற்பொழிவாளர்

எஸ்.டி.ஸ்ரீனிவாஸாசாரியார்

உபதலைவர்,அரசர் கல்லூரி, திருவையாறு

மனிதனுடைய கல்பனைக்கும் எட்டாத காலந்தொடங்கி சேதனர்களுக்குத் தத்வஹித புருஷார்த்தங்களைஉபதேசித்து வந்த மஹாத்மாக்களின் பூஜிக்கத்தக்க வரிசையில், சிற்சில நாரீமணிகளும் விளங்கி வந்தனர் என்பது ச்ருதிப்ரஸித்தம். அப்படிப்பட்ட மஹிளாமணிகளின் ஸந்ததியிலே மனிதவர்க்கம் என்றும் மறவாமல் போற்றத்தக்கவள் ஸ்ரீ ஆண்டாளாகும். இவ்வாண்டாளது சிறப்பு யாது? இவர் சேதன வர்க்கத்திற்குச் செய்த உபகாரம் யாது?



சேய் நோய்க்குத் தாய் மருந்து அருந்துமாப்போல, பவரோகத்தால் பீடிக்கப்பட்ட கோடானுகோடி ஜீவராசிகளின் துயரத்தைக் கண்டு அதைத்தீர்ப்பான் வேண்டி இப்பெருமாட்டி “ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்சபத்ந்யௌ” என்றபடி தாம் ஸர்வேச்வரனுடைய திவ்ய மஹிஷியாயிருந்தும் க்ஷமை என்னும் குணத்திற்கு ஏக நிதானமாயிருந்தும், உபய விபூதியின் அனுபவத்தில் நிலைபெற்றவளாயினும், இந்த நிலையில் மாத்திரம் திருப்தி பெறாமல், சேற்றில் விழுந்த குழந்தையை எடுக்கும் தாய் தானும் சேற்றில் இறங்குவது போல, இம்மண்ணுலகில் வந்து பிறந்தார். நித்ய விபூதியின் ஆனந்தமயமான போகங்களைவிட்டுக் காமக்ரோதங்களுக்கு ராஜதானியும் துக்கமயமானதுமான இந்த லோகத்தில் அவர் வந்து பிறந்த ஒரு தன்மையை வர்ணிக்க யாரால் முடியும்?

ச்ருதிப்ரோக்தமான வர்ணானுகுண அனுஷ்டானத்துடன் இயைந்த பக்தி மார்க்கம் ஸர்வஸாதாரணமல்லவென்றறிந்து மஹாபலத்தை எளிதில் யாவரும் பெற வேண்டுமென்னும் தயையினால் தூண்டப்பட்ட மஹாசயத்துடன் இவர் ஸர்வேச்வரனை அடைவதற்குத் தம் வாழ்வினாலும் அதைப்போலவே இனிய உபதேசத்தாலும் உபாயத்தைக் காட்டி அருளினார். மனிதன் உணர்ந்து

கொள்ளவேண்டிய பொருள்கள் ஐந்து என்பர் பெரியோர். (1) ஸர்வசக்தனாய், ஸர்வத்ர ஸன்னிஹித னாய் ஸர்வசேஷியாய் ஒரு ஜகன்னியந்தா உண்டு. (2) அவனுக்கு சேஷபூதனாய் ஞானஸ்வரூபனாய் நித்ய நிர்மலனாய் ஆத்மா என்றொரு வஸ்து உண்டு. (3) இந்த ஆத்மாவாகிற சேதனன் ஸர்வேச்வரனுடைய கோபத்தை மாற்றி அவனுடைய ஸுகைக பலமான திவ்ய கைங்கர்யங்களில் ஈடுபட்டு, (4) அதற்கு இடையூறான காமாரிஷட்வர்க்கங்களின் ஆதிராஜ்யத்தை ஒழித்து, (5) நித்யமாய் ஆனந்தமயமாய், அபுனராவ்ருத்தியுதமான திவ்யலோக விசேஷத்தில், ஸர்வேச்வரனுடன் "பரமம் ஸாம்யமுபைதி" என்ற ச்ருதி மஹிதமான பதம் பெற்று "ததந்நா: சாமகாயந்தே" என்று ததைகபரனாய் ஸர்வேச்வரனுடைய அகுண்டிதமான திவ்யாநுபவ பரம்பரையில் முழுகிக் களிப்பது. இதை அர்த்தபஞ்சகம் என்பார்கள். ஸ்வஸ்வரூபம், பரஸ்வரூபம், உபாயஸ்வரூபம், பலஸ்வரூபம், விரோதிஸ்வரூபம். இதைத் தம்முடைய ஆச்சர்யமான வாழ்க்கையாலும், அதைப்போலவே ஆச்சர்யமான க்ரந்த ரத்னங்களாலும் காட்டி அருளின சிறப்பே இம்மாதரசியைச் சாரும். தம்மை ஸர்வேச்வரனுக்கு உரித்தாகிய ஒரு திவ்யஹவிஸ்ஸாகவும், இவ்வத்யத்புதமான பொருளைக் காமக்ரோதாதிகளில் ஈடுபடுத்தல் மிகவும் இழிவென்றும், அவனையே திருமணம் புரியும் நோன்பில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றார். மானுடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் என்னும் இவருடைய ஒரு சிறு வாக்கியத்தில் உலகத்தில் கொந்தளிக்கின்ற துக்கத்ரயத்திற்கும் அத்யாச்சர்யமான திவ்யௌஷதம் தாண்டவமாடுகிறது. மனிதன் தெளிய வேண்டியது தத்வ, ஹித, புருஷார்த்தமாகிற மூன்றுதானே. இம்மாதரசி நாராயணனே நமக்கே பறை தருவான் என்று தத்வத்தையும், "நீராடப்போதுவீர் பங்கயக்கண்ணனைப் பாடேலோரெம்பாவாய்" என்று ஹிதத்தையும், "தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து" " என்றுந் திருவருள் பெற்றின்புறுவரெம்பாவாய்" என்று ஐஹிஹ ஆமுஷ்மீக இன்பங்களான புருஷார்த்தத்தையும் எடுத்துக்காட்டினார். வாழ்க்கையை இவர் ஒரு போகலாபமாகக் காட்டவில்லை. எது வேண்டுமானாலும் செய்யலாம், நாமஸங்கீர்த்தனம் போதும், என்று சொல்லவில்லை. வாழ்க்கையில் சிறந்த தியாகங்கள் செய்து , வர்ணாச்ரமானுகுண அனுஷ்டானங்களை விடாது கைப்பற்றித் தத்வத்ரயம் தெளிய வேணும் என்கிறார்.

"நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறெண்ணி உகந்தே லோரெம்பாவாய் "

“பனித்தலை வீழநின் வாசல் கடைபற்றி” “குள்ளக்குளிரக்குடைந்து நீராடாதே பள்ளிக்கிடத்தியோ” எனும் இவைகளால் ஸதாசார ப்ராப்தமான அனுஷ்டானங்கள் ஸர்வேச்வரனுடைய முகோல்லாஸந் தருவன எனப் புகழப்பெறுகின்றன. மார்கழி நோன்பான ஸர்வேச்வர பஜனத்தின் பலமாக இவர்காட்டுவன உன் பொற்றாமரையடியே போற்றுவோம்; எற்றைக்கு மேழேழ்பிறவிக்கும் உந்தன்னோடுற்றோமேயாவோம்; உமக்கே நாம் ஆட்செய்வோம்; மற்றை நம் காமங்கள் மாற்றேலோரெம்பாவாய். மாறிமாறிப் பிறக்கும் சேதனனுக்கு இந்த மாதாவைப் போல் ஞானப் பயனளித்து உயிரூட்டும் சிறப்பு யாருக்கு உண்டு?

ஸ்ரீ ஆண்டாளுடைய தனியனிலிருந்து இவர் தன்னுடைய பாரதந்த்ரியத்தை எடுத்துரைக்கவே திவ்யாவதாரம் செய்தது. ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமானது உத்கோஷிக்கின்ற அந்தப்புரந்யாயம், அதாவது, பதிவ்ரதையான ஸ்த்ரீ தன் பர்த்தாவுக்குக் கீழ்ப்படிந்து தன் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளை அவன் ஆதீனமாக்குவது போலச் சேதனனும் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் தனக்கென ஓர் விருப்பு வெறுப்பு இல்லானாகி, ப்ராணகாந்தனான ஸ்ரீய: பதியின் திவ்ய ஸங்கல்பத்திற்கு ஆதீனனாகவே இருந்து மகிழ்வது. இதனால் ஸ்ரீ வைஷ்ணவமே சுத்தாந்த ஸித்தாந்தமெனப் பெயர் பெற்றது. இந்தத் தத்துவத்தை ஸ்ரீ ஆண்டாள் இரண்டு விதமாக விளக்கி அருளினாள்.

(1) தம் அழகிய வாழ்க்கையினால் --- பெண்பாலாகப் பிறந்தருளிய தம்மை

பதிஸம்யோக ஸுலபம் வயோ வீக்ஷ்ய சமே பிதா I

சிந்தார்ணவகத: பாரம் நாஸஸாதாப்லவோயதா II

என்கிறபடி தந்தை மனங்கலங்க எட்டுப் பிராயமுள்ள இக்குழந்தை ஸ்ரீ அழகியமணவாளனே தமக்கு உற்ற மணவாளனென்று சொல்லி, செத்துப் பிறந்து பாப பண்டாரங்களான இந்த ஸம்ஸார சேதனர்களிடத்தில் கணவன் என்ற கருத்தைச் செய்யாமல், அழகிய நம்பிக்கையுடன் ஸ்ரீ அச்சுதனையே மணம் புரிந்தாளென்பதை அகமகிழ்ச்சியுடன் காண்கிறோம். இதையே (2) தம் இனிய திருப்பாவைப் வாயிலாகவும் திருமொழி வாயிலாகவும் விளக்குகிறார்.

உந்தன்னோடுறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது

உந்தன்னோடுற்றோமே ஆவோம் உமக்கே நாம் ஆட்செய்வோம்

**மற்றை நம் காமங்கள் மாற்றேலோரெம்பாவாய்**

என்றும்

“வானிடை வாழும் அவ்வானவர்க்கு மறையவர் வேள்வியில் வகுத்த அவி
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப
மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே”

என்றும் கூறுகிறார். சேதனன், ஸர்வேச்வரனுக்கு என்றே பிறந்த கல்யாணப் பெண் என்றும் அவனைக் காமக்ரோதத்திற்கு உரிமையாக்குவது, ஸம்ஸார வாழ்வில் ஈடுபடுத்துவது என்பன, தெய்வத்திற்கு என வகுக்கப்பட்டயக்ஞ ஹவிஸ்ஸை நரி முகர்ந்து பார்ப்பதுபோல் என்கிறார். இதே கருத்தினை ஜானகியார் “த்வம் நீச சசவத் ஸ்மிருத:” என்று ராவணனைச் சொல்வதால் விளக்குகிறார்.ஸ்ரீ ருக்மிணிப் பிராட்டியும் சைத்யன் தம்மை மணந்துகொள்ளக் கூடாது என்பதை “மாவீரபாகமபிமர்சது சைத்ய ஆராத் கோமயுவத் மிருகபதோ பலிம் அம்புஜாக்ஷ” என்கிறார். க்ஷத்திரிய குடும்பத்திலே திவ்யாவதாரம் செய்த ருக்மிணிக்கு அந்த உபமானம் பொருந்தும். கல்பசூத்ரவ்யாக்யாதாவாய், பஞ்சகாலபராயணராய் பரம்பரையாய் யக்ஞநிஷ்டர்களான விப்ரோத்தம குலத்தில் ஜனித்த ஸ்ரீ ஆண்டாளுக்கு இந்த உபமானம் பொருந்தும்.

ஸர்வேச்வரனிடத்தில் ஸ்ரீ ஆண்டாளுடைய ஸ்வயம் ப்ரயோஜனமான காதலோ வர்ணிக்கத் தக்கதல்ல.”ப்ரம்ஹந் க்ருஷ்ணகதா:புண்யா:” என்றும், “மதுராதிபதேர் நிகிலம் மதுரம்” என்றும் ப்ரம்மத்தை ஸ்ரீக்ருஷ்ணனாகக் கண்டு அடையத் துணிந்தார். கண்ணனை அடைய எந்தச் செயலும் புரிந்து யார் காலிலும் விழத் துணிகிறார். காமனையும் சோமனையும் புகழ்ந்து போற்றுகிறார்.குயிலைக் கெஞ்சுகிறார். மேகத்தைத் துதிக்கிறார். தாம்வாழும் ஊரே ப்ருந்தாவனமாகவும், கோகுலமாகவும் கண்டார். கண்ணன் குழலோசை எழுப்பித் தம் துயரை யெல்லாம் தணிப்பதைக் கேட்டார். இவ்வுலகப்பற்றை விட்டார். தந்தையையும் தாயையும் நீத்தார். “என் கண்ணன் எங்கே உளன்? இங்கே போதக் கண்டீரோ?” என்று கேட்டுக் கொண்டே ஓடினார். இவ்வுலக மக்களுக்குக் கிடைத்தற்கரிய பேற்றை இங்கேயே கண்டார். ப்ருந்தாவனத்தையும் கண்ணபிரானையும் நேரில் கண்டார். வாழ்வின் வேற்றியைப் பெற்றார். அவனுடன் கலந்து இன்புற்றார். கடவுளைக் குறித்து ஆத்ம வஸ்து படவேண்டிய தாகமும், அவ்வேட்கையால் பிறக்கும் ருசியும் அதனால் வரும் அன்வேஷணமும் இம்மாபெருங்காதலால் ஈச்வரனது தயையும், அதனால் அவனை அடைவதான மஹாலாபமும் இப்பெருமாட்டியின் களங்கமற்ற இனிய வாழ்விலிருந்து வெளியாகின்றன. இவருக்கு ஸர்வேச்வரன் அருளியதானது தன்னை நினைப்பார்க்குத் தன்னையே தந்தருளும் கற்பகம் எனும் சிறந்த தத்வத்தையே விசதமாக்குகிறது. சாஸ்த்ரைகசரணர்களாய் தைவபீருக்களான எளிய ப்ராம்மண குடும்பத்தில் அவதரித்துத் தம் காதலால் கண்ணனை உருக்கி அவனது பட்டமகிஷியாய் விளங்கின இச்சிறு குழந்தையின்நிகரில்லாத அன்பை எப்படி எடுத்துக் காட்டுவது? இவரது அன்பிற்கு இவ்வானமும் கடலும் நிகராவன அல்ல. மற்ற ஆழ்வார்களைவிட இவரது பெருமையை ஸ்வாமி நிகமாந்த தேசிகன்

**கோதாஸ்துதியில்** “போக்தும் தவ ப்ரியதமம்” என்கிற ச்லோகத்தாலும், ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளைதிருப்பாவை அவதாரிகையிலும் அருளிச் செய்தனர். **இந்தப் பெருமாட்டியின் திவ்யாவதாரத்தால் தண்தமிழும் தையலரும் தமிழ்நாடும் ஒருபடி உயரக் கண்டோம்.**